**மாநில முதன்மை கணக்காயர் அலுவலகம் (கணக்கு & பணிவரவு),**
**சென்னை 600018**

பொருள் : அரசு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் - கணக்குகள் பராமரிப்பு ஒப்படைப்பு சம்பந்தமாக

= = = =

இவ்வலுவலகத்தில் இதுநாள் வரை பராமரிக்கப்பட்டு வந்த **அரசு பங்களிப்பு ஓய்வூதிய திட்டம்"** சம்பந்தமான பணிகள் (புதிய எண் வழங்கல் மற்றும் கணக்கு பராமரிப்பு) அனைத்தும் 27.12.2013 நாளிட்ட தமிழக அரசாணை எண் 463 நிதி (பி.ஜி.சி) ல் அறிவுறுத்தப்பட்டுள்ளபடி "தமிழக தகவல் தொகுப்பு மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இனி 2013-14 ஆண்டு கணக்கு முதல் இத்திட்டம் சம்பந்தமான பணிகள் அனைத்தும் அரசு தகவல் தொகுப்பு மையத்தால் பராமரிக்கப்படும். மேலும் 2012-13 ஆண்டிற்கான சந்தாதாரர்கள் அனைவரின் கணக்கு விவரப்பட்டியல்கள் அந்தந்த கருவூல அலுவலர்கள் மூலம் வரைவு மற்றும் வழங்கல் அலுவலர்களுக்கு (டி.டி.ஓ) அனுப்பும் பொருட்டு, சென்னை கருவூல கணக்கு இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இனி அரசு பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் குறித்த அனைத்து விவரங்களுக்கும் சந்தாதாரர்கள் ஆணையர், அரசு தகவல் தொகுப்பு மையம், சென்னை 600025 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஒப்பம்
துணை மாநில கணக்காயர் (நிதி 2)